டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
agridoctor.in | 11.12.2024 புதன்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 144 - Madurai | Online Edition

கல்யாண் ஜுவல்லர்ஸ்

# தமிழ்நாட்டில் 4 நாட்களுக்கு மழைக்கு வாய்ப்பு!

## வானிலை மைய தென்மண்டல தலைவர் பாலசந்திரன் தகவல்

சென்னை, டிச.10

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் நிலவி வந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுபெற்றுள்ளது. இது மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து இலங்கை-தமிழ்நாடு இடையே கடற்கரையை நோக்கி நகரும் வாய்ப்பு உள்ளது என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



இதுகுறித்து வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் பாலசந்திரன் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள வானிலை ஆய்வு மையத்தில் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது பேசிய அவர், குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வலுப்பெற்று நேற்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக தென்மேற்கு வங்ககடல் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் நிலவி வருகிறது. இது தொடர்ந்து இன்று மேற்கு திசை நோக்கி நகர்ந்து இலங்கை – தமிழ்நாடு கடற்கரை நோக்கி நகரக்கூடும்.

இதன் காரணமாக அடுத்த 4 நாட்களுக்கு தமிழகம், புதுவை, காரைக்கால் பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. இன்றைய தினம் டெல்டா மாவட்டங்கள் கடலூர், காரைக்கால் ஆகிய இடங்களில் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.




திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, அரியலூர், சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது.

12ஆம் தேதி திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் மிக கனமழையும், திருவள்ளூர் தொடங்கி நாகப்பட்டினம் வரை வடக்கடலோர மாவட்டங்கள் உள்ளிட்ட நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், மதுரை ஆகிய மாவட்டங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது.

13ஆம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை ஒட்டி உள்ள மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தற்போதைய சூழலில் இது புயலாக மாற வாய்ப்பு இல்லை எனவும் இன்று முதல் சென்னையில் சில பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது எனவும் தெரிவித்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உலக மண் தின கொண்டாட்டம்

புதுக்கோட்டை, டிச.10

புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையம் உலக மண் தின நாள் கொண்டாடப் பட்டது.



இவ்விழாவிற்கு முனைவர் ஜெ.பாலமுருகன், இணைப் பேராசிரியர் (மண்ணியல்) துவக்கயுரை ஆற்றினார். இவ்விழாவில் நிலைய தலைவர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ.யுவராஜா தலைமை வகித்து சிறப்புரையாற்றி பேசுகையில்,

மண்வளத்தை பாதுகாக்க நாம் ஒவ்வொருவரும் உறுதி ஏற்க வேண்டும். அதாவது செயற்கை உரங்களை குறைத்து இயற்கை இடுபொருட்களை அதிக அளவில் இட வேண்டும். மேலும் மண் ஆய்வு செய்து அதற்கு ஏற்ப உரமிடுதல் செய்து மண்வளத்தை பாதுகாக்க வேண்டும் என்று எடுத்துரைத்தார்.

மேலும் ஜெயபாலன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மற்றும் வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்சி மையம்) கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். முனைவர் ஆ.அழகேசன், இணைப் பேராசிரியர் (உழவியல்) பேசுகையில் ஒருங்கிணைந்த ஊட்ட சத்து மேலாண்மை மற்றும் பசுந்தாள் உரங்களின் முக்கியத்துவம் குறித்து விளக்கம் அளித்தார்.

மேலும் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் முனைவர் ஜெ.பாலமுருகன், முனைவர் சி.மேனகா மற்றும் முனைவர் செ. ஜேசுப்ரியா பூர்ணகலா ஆகியோர் விவசாயி களுக்கு தொழில்நுட்ப உரைகளை வழங்கினார்கள்.

மண் பராமரிப்பு பேரணி வேளாண் அறிவியல் நிலையம், வம்பன் 4 ரோட்டில் நடந்தது. இவ்விழாவில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள், மாணவர்கள் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர். இவ்விழாவில் விவசாயிகளுக்கு மண்வள அட்டை வழங்கப்பட்டது. மற்றும் கலந்துக்கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் மண்புழு உரம் இடுபொருளாக கொடுக்கப் பட்டது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

இதுபோலவே உலக மண் தினமானது மங்கனாப்பட்டி ஊராட்சி துவக்க பள்ளியில் 100 மாணவர்கள், 12 ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியருடன் கொண்டாடப்பட்டது. மேலும் 120 வேளாண் பட்டய படிப்பு மாணவர்களுடன் மண் பராமரிப்பு பேரணி வேளாண் அறிவியல் நிலையம், வம்பன் 4 ரோட்டில் ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்விழா ஏற்பாடுகளை பி.கருப்பசாமி, திட்ட உதவியாளர் (தொழில்நுட்பம்), தே.அமுல்ராஜ் திட்ட உதவியாளர் (கணினி), அ.தினகரன், காலநிலை கவனிப்பாளர் ஆகியோர் செய்திருந்தனர்.



# பயறு வகைகளில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை

அட்மா திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரம், ராஜபாளையம் கிராமத்தில் பயறு வகைகளில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை குறித்த பண்ணைப்பள்ளி பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

25 விவசாயிகள் 5 குழுக்களாக பிரிந்து முன்நிலை செயல் விளக்கம் அமைக்கப்பட்ட உளுந்து வயலில் ஒரு ஏக்கருக்கு இரண்டு கிலோ டி.ஏ.பி 10 லிட்டர் தண்ணீரில் 24 மணி நேரம் ஊறவைத்து 2 சதம் டி.ஏ.பி. கரைசல் தயார் செய்து என்.ஏ.ஏ உடன் கலந்து தெளிப்பு முறைகள் குறித்தும், ஒரு ஏக்கருக்கு பயறு ஒன்டர் கரைசல் தயார் செய்யும் முறைகள் குறித்தும்




செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. மேலும் தற்பொழுது உளுந்து பூ பிடிக்கும் தறுவாயில் உள்ளதால் 2 சதம் டி.ஏ.பி. கரைசல் உடன் பயிர் வளாச்சி ஊக்கி என்.ஏ.ஏ கலந்து 15 நாள் இடைவெளியில் தெளிக்க 5 குழுக்களால் முடிவு எட்டப்பட்டது.

ஓய்வு பெற்ற துணை வேளாண்மை அலுவலர் கே.பழனிசாமி பயிற்சியாளராக கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன், உதவி வேளாண்மை அலுவலர் ச.தனபால், உதவி தொழில்நுட்ப மேலாளர் சி.சரஸ்வதி மற்றும் தீபன் முத்துசாமி உடன் இருந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 10.12.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 36 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 35 | 38 | 57 | உருளை (பிற) | 30 | 38 |
| 1B | கத்திரி(Nadu) | 45 | 48 | 57A | உருளை(ஊட்டி) | 30 | 56 |
| 2 | வெண்டை | 45 | 48 | 58 | மேரக்காய் | 20 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 24 | 27 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 35 | 40 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 24 | 27 | 60 | கேரட் | 60 | 65 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 80 | 84 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 60 | 68 |
| 6 | புடலை | 30 | 34 | 62 | நூல்கோல் | 40 | 44 |
| 7 | பீர்க்கன் | 45 | 50 | 63 | டர்னிப் | 40 | 44 |
| 8 | சுரைக்காய் | 25 | 28 | 64 | மு.கோஸ் | 25 | 30 |
| 9 | பாகற்காய் | 30 | 36 | 65 | மு.கோஸ்(கலர்) | 0 | 0 |
| 10 | கொத்தவரை | 40 | 48 | 66 | காளிபிளவர் | 40 | 47 |
| 11 | பூசணி | 15 | 18 | 67 | பட்டாணி | 110 | 120 |
| 12 | அரசாணி | 18 | 22 | 68 | பூண்டு | 260 | 338 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 30 | 35 | 69 | இஞ்சி | 48 | 100 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 30 | 35 | 70 | புரூக்கோலின் | 160 | 180 |
| 15 | சி.வெங்காயம் | 60 | 64 | 71 | பென்னி பீன்ஸ் | 80 | 86 |
| 16 | பெ.வெங்காயம் | 60 | 63 | 72 | குடமிளகாய் | 50 | 54 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 30 | 36 | 73 | ஊட்டி அவரை | 120 | 130 |
| 18 | பச்சை மொச்சை | 60 | 65 | 74 | பஜ்ஜி மிளகாய் | 0 | 0 |
| 19 | முருங்கை | 0 | 0 | 71A | | | |
| 20 | தேங்காய் | 54 | 58 | | | | |
| 21 | மாங்காய் | 55 | 60 | | | | |
| 22 | வாழைக்காய் | 30 | 34 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 42 | 46 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 50 | 60 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 28 | 32 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 38 | 42 | 78 | பப்பாளி | 22 | 26 |
| 28 | கறிவேப்பிலை | 90 | 94 | 79 | மாதுளை | 120 | 170 |
| 29 | கொத்தமல்லி | 42 | 48 | 80 | திராட்சை | 60 | 70 |
| 30 | புதினா | 7 | 8 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 20 | 22 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 20 | 22 | 83 | ஆரஞ்ச் | 40 | 60 |
| 33 | சுக்கிட்டி | 20 | 25 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 20 | 22 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 20 | 22 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 20 | 22 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 45 | 50 |
| 40 | கோவக்காய் | 50 | 54 | 91 | பூவன் | 35 | 38 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 38 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 25 | 28 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 35 | 96 | நேந்திரன் | 60 | 65 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 45 | 48 | 97 | செவ்வாழை | 75 | 80 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 45 | 48 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 40 | 44 |
| 50 | நிலக்கடலை | 60 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 65 | 75 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 45 | 48 | | | | |
| 55A | துவரை | 60 | 65 | | | | |

# விதைப்பதற்கு முன்பு விதைத்தரங்களை கண்டறிய விவசாயிகளுக்கு வேண்டுகோள்!

விவசாயிகள் தாங்கள் இருப்பு வைத்துள்ள விதை குவியல் களில் இருந்து விதை மாதிரிகளை எடுத்து கோவை மாவட்டத் திலுள்ள 1424 ஏ தடாகம் ரோடுஇ ஜிசிடிஇ போஸ்ட் கோவை–13 என்ற முகவரியில் இயங்கி வரும் விதைப்பரிசோதனை நிலை யத்திற்கு அனுப்பி விதைப்பரிசோதனை செய்து விதை குவியலின் விதை தரங்களான புறத்தூய்மை, முளைப்புத்திறன், பிறரக கலவன் மற்றும் ஈரப்பதம் ஆகியவற்றை துல்லியமாக தெரிந்து கொண்டு விதைப்பு செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**விதைப்பரிசோதனையின் ஏன்?**

விதை குவியலின் தரம் அறிவதால் விதையின் அளவு தெரிந்து விதைக்கலாம். விதைச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள விதை தரங்களை விதைகளில் உள்ளனவா என அறிந்து கொள்ளலாம்.

விதை தரம் அறிந்து விதைப்பதால் நல்ல மகசூல் மற்றும் நல்ல வருவாய் கிடைக்கிறது. விவசாயிகளும், விதை விற்பனை யாளர்களுக்கும் விதை உற்பத்தியாளர்களுக்கும் விதையின் உண்மையான தரத்தை உறுதி செய்யும் நோக்கத்துடன் விதைப்பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது.

**1.புறத்தூய்மை சோதனை**

பயிர் அறுவடை முடிந்து கதிர் அடித்து பிரிக்கப்பட்டு விதை குவியல்களில் இருந்து கிடைக்கும் விதைகளை உடனடியாக விதைப்பிற்கு தகுதியாக இருக்காது.

அந்த விதையுடன் சிறு கற்கள், மண்துகள்கள், குச்சி, சாவி விதைகள் கலந்து இருக்கும். எனவே அறுவடை முடிந்து பிரித்து எடுக்கப்படும் விதைகளை விதை சுத்திகரிப்பு செய்து சுத்தமாகவும் பிற பொருட்கள் கலப்பு இன்றியும் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். புறத்தூய்மை சோதனையின் போது தூய விதைகள், களை விதைகள் பிற விதைகள் மற்றும் உயிர்ப்பற்ற பொருட்கள் கலந்துள்ளனவா என கண்டறியப்படுகிறது.


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
IS 4985 : 2021
IS 9537
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

### 2.முளைப்புத்திறன் சோதனை

முளைப்புத்திறன் சோதனையானது விதை உயிரும் வீரியமும் கொண்டு இயங்குவதை காட்டுகிறது. நல்ல முளைப்புத்திறன் கொண்ட விதைகுவியல்களில் இருந்து விதைக்கப்படும் விதைகளால் நிறைவான பயிர் எண்ணிக்கையில் வயலில் பயிர்கள் செழித்து வளரும். முளைப்புத்திறன் குறைந்த விதைகளை பயன்படுத்தினால் மகசூல் பாதிக்கும்.

### 3. ஈரப்பத சோதனை

ஒரு விதையின் ஈரப்பதம் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருக்கக்கூடாது. சரியான ஈரப்பதம் உள்ள விதைகள் பூச்சி பூஞ்சாண்கள் தாக்குதல் இன்றி சேமித்து வைக்க கூடிய நிலையில் இருக்கும். ஒவ்வொரு குறிப்பிட்ட பயிரின் விதைக்கும் ஏற்ற ஈரப்பதம் உள்ளதா என ஈரப்பதமானி கொண்டு ஈரப்பத சோதனை செய்யப்படுகிறது.

### 4. பிறரக விதை பரிசோதனை

விதைகள் உயிருள்ளவை ஏற்ற சூழ்நிலையில் முளைக்கும் வளரும் பூக்கும் காய்க்கும் ஒரே இரக விதைகள் ஒரே சமயத்தில் வளர்ச்சியடைந்து பூத்து பழுதின்றி அதிக மகசூல் கொடுக்கின்றது. பிறரகம் கலந்த விதைகளை விதைப்பதால் நோய் தடுப்புஇ கலவன் எடுப்பது போன்ற செலவு அதிகமாவதுடன் விதையின் தரம் குறைகிறது.

ஆகையால் பிற இரக விதைகள் கலப்பு தடுக்க வேண்டும். பிற ரக விதைகளை பார்த்து பிரித்து அகற்றி பயிரின் மகசூலையும் தரத்தையும் அதிகரிக்க வேண்டும். விதைப்பரிசோதனை நிலையத்தில் விதைகுவியல்களில் பிறரக விதைகள் கலந்து உள்ளனவா என்பதை நுண்ணோக்கி மூலம் கண்காணித்து ரகத்தின் குணநலன்களை கருத்தில் கொண்டு பிரித்தறியப்படுகிறது.

விவசாயிகள் சாகுபடி செய்ய வாங்கும் விதைகளையோ அல்லது தங்கள் கைவசம் உள்ள விதைகளையோ விதைப்பதற்கு முன் முளைப்புத்திறன் அறிய விதை மாதிரிகளை விதைப்பரிசோதனை நிலையத்தில் ரு.80/- மட்டும் ஆய்வு கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் ரகம் குவியல் எண் ஆகியவை குறித்த விவர சீட்டுடன் நெல் விதை 50 கிராம், உளுந்து பாசிப்பயிறு 100 கிராம், மக்காச்சோளம், நிலக்கடலை 500 கிராம், காய்கறிப்பயிர்களான கத்தரி, தக்காளி, மிளகாய் 10

கிராம், சுரை, பரங்கி, வெள்ளரி 100 கிராம், பாகல், புடலை 250 கிராம் ஆகிய அளவில் விதை மாதிரி எடுத்து தங்களது முழு முகவரியுடன் கூடிய கடிதத்துடன் மேற்கண்ட முகவரிக்;கு அனுப்பி விதையின் முளைப்புத்திறன் அறிந்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டுமாறு விதைப் பரிசோதனை அலுவலர் சை.நர்கீஸ் கேட்டுக் கொண்டார்.



# பெருந்துறை வட்டாரத்தில் சிறுதானிய சாகுபடி குறித்த விழிப்புணர்வு பேரணி

ஈரோடு, டிச.10




ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரத்தில் வேளாண்மை–உழவர் நலத்துறையின் மூலம் சிறுதானிய சாகுபடி தொழில் நுட்பங்கள் மற்றும் சத்துமிகு சிறுதானிய உணவுகளின் நன்மைகள் குறித்த நடமாடும் வாகன விழிப்புணர்வு பிரச்சாரம் பெருந்துறை மற்றும் அதன் சுற்று வட்டார கிராமப் பகுதிகளில் நடைபெற்றது. இந்த விழிப்புணர்வு பிரச்சாரத்தை பெருந்துறை வேளாண்மை உதவி இயக்குநர் க.பிரசாத் தலைமை தாங்கி, விழிப்புணர்வு பிரச்சார வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார். அவர் சிறுதானியங்களின் சாகுபடி குறிப்பு மற்றும் சிறுதானிய உணவுகளை உண்பதால் உண்டாகும் நன்மைகள் பற்றிய துண்டுப்பிரசுரங்களை விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் கொடுத்து நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கம் சார்பில் நடைபெற்ற இப்பிரசாரத்தில் சோளம், கம்பு, இராகி, திணை மற்றும் குதிரை வாலி உள்ளிட்ட சிறுதானியப் பயிர்கள் சாகுபடி செய்வதால் கிடைக்கும் நன்மைகள் குறித்து விவசாயி களுக்கு விளக்கப்பட்டது. சிறுதானியங்களை குறைந்த மண் வளம் உள்ள இடங்களில் சாகுபடி செய்யலாம். மேலும் வறட்சியை தாங்கி வளரக் கூடிய இப்பயிர்களுக்கு பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல் மிகக் குறைவாக இருக்கம். புரதசத்துகள், கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு சத்துகள் மற்றும் இரத்தசோகை நோய் போன்ற பிரச்சனைகளிலிருந்து விடுபட முடியும். பெருந்துறை மற்றம் அதனை சுற்றியுள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் நடமாடும் பிரச்சார வாகனங்கள் மூலம் துண்டுப் பிரசுரங்கள் வழங்கி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் சிறுதானிய சாகுபடி மற்றும் சிறுதானிய உணவுகளின் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பெருந்துறை வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் அட்மா திட்ட பணியாளர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பயிர் கழிவுகளை தீயிட்டு எரிக்க வேண்டாம்!

## நிலத்திலே மடக்கி உழவு செய்யலாம்!!




எந்த ஒரு பயிராக இருந்தாலும் அதனுடைய அறுவடை க்கு பின் உள்ள தாள்கள், தட்டைகளை தீயிட்டு எரிக்க வேண்டாம். இதனால் சுற்றுப்புற சூழல் மாசு படுவதுடன் கடும் தீ வெப்பத்தால் மண்ணின் மேற்பரப்பில் உள்ள நுண்ணுயிர்கள் மடிந்து விடும். அது மட்டுமல்ல அந்த கழிவுகளை மண்ணில் டிஸ்க் அல்லது ரோட்டோவேட்டரை பயன்படுத்தி மண்ணில் மடக்கி உழவு செய்தால் மண்ணின் கரிம சத்தும் மண்வளமும் கூடும்.

முன்பெல்லாம் அவற்றின் கழிவுகளை (கம்ப தட்டை, சோள தட்டை, வைக்கோல் போன்றவற்றை கால்நடைகளுக்கு உணவாக தீவனமாக பயன்படுத்தபட்டு வந்தது. தற்போது கால்நடைகளின் எண்ணிக்கை கிராமப்புறங்களில் நாளுக்கு நாள் குறைந்து வருவதால் அந்த பயன்பாடும் ( தீவனமாக) மாறுவதும் குறைந்து வருகிறது. இதனால் இந்த தட்டைகள் தீவன தாள்கள் ஒரு வேண்டாத பொருளாக விவசாயிகள் அவற்றை அப்புறப்படுத்தவது ஓரே குறியாக இருந்து எரிக்க தொடங்கி விட்டார்கள், இது தவறானது.

**பயிர் கழிவுகள் மண்ணை வளமாக்கும் எப்படி?**

பொதுவாக தட்டைகள் தாள்கள் வேகமாக மக்குவதில்லை என்ற குறைபாடு விவசாயிகளிடம் இருந்து வந்தது. இந்த பிரச்சனைக்கு தொழில்நுட்ப தீர்வாக தமிழக வேளாண்மை பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் அறிவியல் துறை (ENVIRONMENTAL SCIENCE DEPARTMENT) தட்டை வேகமாக மக்கச் செய்யும் ஊக்கியை கண்டறிந்து உள்ளது. பொதுவாக ஏக்கருக்கு 3 டன் தானியங்கள் விளைவதாக எடுத்துக் கொண்டால் ஏறக்குறைய 3 டன் தட்டை கழிவுகள் கிடைக்கும். அவற்றை கால்நடைகள் இருந்தால் தீவனமாக பயன் படுத்தலாம்.

இல்லாதபட்சத்தில் அவற்றை மழை காலங்களில் மடக்கி நன்றாக உழுது போட்டு அவற்றின் மீது இந்த TNAU DE-COMPSOR தெளித்தால் அவை விரைவாக மக்கி மண்ணின் கரிம சத்தை (ORGANIC CARBON) அதிகரிக்க உதவுகின்றன. அது மட்டுமல்லாது பூசா (PUSA - ICAR) நிறுவனத்தின் கண்டு பிடிப்பான 'நுண்ணுயிர் பெருக்கி மாத்திரை 4 எண்களை கரைத்து கழிவுகள் மூலமாக தெளித்து மக்க வைக்கலாம். இது அமேசானில் கூட கிடைக்கும். விலை 279/ மட்டுமே. தற்போது அதிகமாக இரசாயன உரங்கள் போடுவதால் மண்ணின் வளமும் விளைச்சல் திறனும் நாளுக்கு நாள் குறையத் தொடங்கி விட்டதை இந்த மாதிரி செயல்களால் மண்வளத்தை மேம்படுத்தலாம். இதற்கென கூடுதலான செலவுமில்லை. மண்ணில் விளைந்த பயிரை மண்ணுக்கு உரமாகிறது. மடக்கி உழவு செய்வதால் உரச்செலவும் சாகுபடி செலவும் குறையும். அதுமட்டுமல்லாது மண் வளத்தையும் பாதுகாக்கலாம். இதனை விவசாயிகள் புரிந்து செயல்பட வேண்டும்.

சத்துகள் குறைந்து விட்ட மண்ணை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வருவது கடினமான செயல். ஒரு சதுர அடி மண்ணில் 5 லட்சம் கோடி நுண்ணுயிர்கள் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. அறிவியல் ரீதியாக சொல்ல போனால் கரிம சத்து மற்றும் தழை சத்து ஆகியவை 24க்கு 1 என்ற விகித்தில் இருக்க வேண்டும். ஆனால் அந்த விகிதாச்சாரம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. இந்த மாதிரி தீயிட்டு கொளுத்துவதால் இந்த முறையால் உயிர் சத்து உள்ள மண் பாதிக்கும். இதனால் மறுபடியும் மண்ணில் உள்ள சத்துகளை எடுக்க முடியாத நிலை.

நம்மாழ்வார் ஐயா அவர்களின் அறிவுரைபடி ஒன்றின் கழிவு மற்றொன்றுக்கு உரமாகும் என்பதற்கிணங்க மக்காசோள தட்டை, கம்பு, சோள தட்டை, பருத்தி, துவரை, மார்களை தீயிட்டு எரிக்காமல் உரமாக மாற்றி மண்வளத்தை மலட்டு தன்மை இன்றி காப்போம்.

ஒரு தீக்குச்சி போதும் பல ஏக்கர் கழிவுகளை கொளுத்திட.

அது வேண்டாம். அந்த தவறை இனியாவது செய்யாதீங்க.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# இயற்கை விவசாயத்தை காக்க கிராமப்புற இளைஞர்கள் இயற்கை இடுபொருள் தயாரிப்பில் ஈடுபட வேண்டும்

## சிறுகமணி கேவிகேயில் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் பேச்சு

திருச்சி, டிச.10

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் திருச்சி மாவட்ட உழவர் பயிற்சி மையம் இணைந்து ஊரக இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி இயற்கை இடுபொருட்கள் தயாரிப்பு என்ற தலைப்பில் 9.12.24 முதல் 14.12.24 வரைஆறு நாட்கள் நடைபெற உள்ளது.



இப்பயிற்சியின் முதல் நாளான 9.12.24 (திங்கள்கிழமை) அன்று துவக்க நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு வரவேற்புரை வழங்கி தொடங்கி வைத்து பேசுகையில், இயற்கை வேளாண்மை மற்றும் மண்வள மேம்பாட்டின் முக்கியத்துவம் குறித்தும் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் விவசாயிகளுக்கு வழங்கி வரும் பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில் திருச்சி மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் பூ.வசந்தா கலந்து கொண்டு தலைமையுரை ஆற்றினார். அவர் பேசுகையில், இயற்கை இடுபொருட்கள் தயாரிப்பு நீடித்த நிலையான வேளாண்மைக்கு வழிவகுக்கும். எனவே கிராமப் புற இளைஞர்கள் இது போன்ற வாய்ப்புகளை பயன்படுத்தி தொழில் முனைவோராக மாற வேண்டும் என அறிவுறுத்தினார்.

வேளாண் துணை இயக்குநர் (வேளாண் பயிற்சி மையம்) இரா.ஆனந்தசெல்வி இப்பயிற்சி குறித்த அறிமுக உரை வழங்கினார். மேலும் இயற்கை வேளாண்மையில் ஆறாம் இடம் வகிக்கும் நமது நாட்டை மேலும் முன்னேற்றவும், ஊரக இளைஞர்கள் நகரத்திற்கு இடம் பெயர்வதை தடுப்பதற்காகவும் இப்பயிற்சி நடத்தப்படுகிறது என எடுத்துரைத்தார். பயிற்சியின் மூலம் இயற்கை வேளாண்மை மற்றும் அங்கக வேளாண்மை வழிமுறைகள் மற்றும் இயற்கை இடுபொருள்கள் தயாரிப்பு போன்றவற்றை கற்று பயனடையுமாறு அறிவுறுத்தினார்.

வேளாண்மை அறிவியல் நிலைய இணைப் பேராசிரியர் முனைவர் எம்.மாரிமுத்து இயற்கை உற்பத்தியின் மூலம் ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்க முடியும் என எடுத்துரைத்தார். மேலும், வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களில் இயற்கை விவசாயத்தை கடைபிடிப்பதன் மூலம் ஆரோக்கிய மான உணவுப் பொருட்களை தயாரிக்க முடியும் எனவும் கூறினார்.

வேளாண் அலுவலர் இரா.புவனேஸ்வரி நஞ்சில்லா உணவுப் பொருட்களை உருவாக்குவதே அங்கக விவசாயத்தின் முக்கிய நோக்கமாகும் எனவும், இயற்கை இடுபொருட்களை தயாரிப்பதன் மூலம் உரச் செலவைக் குறைக்கலாம் என அறிவுறுத்தினார். பயிற்சியில் திருச்சி மாவட்டத்தின் பல்வேறு வட்டாரங்களை சேர்ந்த இளைஞர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# அறந்தாங்கி வட்டார விவசாயிகள் வெளி மாநில கண்டுணர்வு பயணம்

புதுக்கோட்டை, டிச.10

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டாரத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மாநில விரிவாக்க திட்டங்களின் சீரமைப்பு திட்டம் 2024-25 கீழ் 20 விவசாயிகள் ராஜேந்திர நகர் ஹைதராபாத்தில் அமைந்துள்ள இந்திய எண்ணெய் வித்து பயிர் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வெளிமாநில அளவிலான கற்றறிவு பயணமாக சென்று வந்தனர். இந்தக் பயணத்தில் கலந்து கொண்ட விவசாயி களுக்கு எண்ணெய் வித்து பயிர் ஆராய்ச்சி நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி துரைமுருகன், ஆராய்ச்சி நிறுவனம் குறித்து எடுத்துரைத்தார்.



மேலும் ஆராய்ச்சி நிறுவனத்தில் அமைந்துள்ள எண்ணெய் வித்து பயிர்கள் கண்காட்சி அரங்கிற்கு சென்று அங்கு பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள எண்ணெய் வித்து பயிர் குறித்த கண்காட்சிகளை விவசாயிகள் கண்டுணர்ந்தனர். மேலும் எண்ணெய் வித்து பயிர்களான எள், சூரியகாந்தி, ஆமணக்கு போன்ற பயிர்கள் சாகுபடி முறைகள் மற்றும் உர நிர்வாகம் ரகத் தேர்வு பூச்சி நோய் கட்டுப்பாடு குறித்து பேராசிரியர் துரைமுருகன் விரிவான பயிற்சியினை விவசாயிகளுக்கு வழங்கினார். ஆராய்ச்சி நிறுவனத்தில் அமைந்துள்ள எண்ணெய் தயாரிப்பு கூடத்திற்கு விவசாயிகளை அழைத்து சென்று எண்ணெய் வித்துக்களில் இருந்து எண்ணெய் பிரித்தெடுக்கும் தொழில்நுட்பத்தை விரிவாக எடுத்துக் கூறினார்.

கண்டுணர்வு பயணத்தில் கலந்து கொண்ட விவசாயிகளை எண்ணை வித்து பயிர் சாகுபடி வயல்களுக்கு அழைத்துச் சென்று நேரடியாக எள், சூரியகாந்தி சாகுபடி முறைகளை விரிவாக எடுத்துக் கூறினார். மேலும் விவசாயிகள் எழுப்பிய சந்தேகங்களுக்கு சரியான விளக்கம் கொடுத்தார். கலந்து கொண்ட விவசாய பெருமக்கள் அத்தனை பேரும் பேராசிரியருக்கும் நிறுவனத்திற்கும் நன்றியினை தெரிவித்தனர்.

இந்த பயிற்சியினை அறந்தாங்கி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பத்மபிரியா வழிநடத்தலின் பெயரில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சரவணன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.



# நெல்பயிரை பலவித நோய்களிலிருந்து பாதுகாக்க சூடோமோனசை பயன்படுத்த வேண்டும்

நெல் பயிரை பலவித நோய்களிலிருந்து பாதுகாக்க சூடோமோனசை விவசாயிகள் வாங்கி பயன்படுத்த வேண்டும் என விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் ஜெயபிரகாஷ் கூறியுள்ளார்.

**இது குறித்து விவசாயிகளுக்கு வழங்கியுள்ள ஆலோசனை வருமாறு :**

தற்போது நிலவும் பருவகால சூழலில் அதிக வெப்பமும், மழையை தொடர்ந்து ஏற்படும் வெப்பநிலை மாறுபாடுகளும் காற்றின் ஈரப்பதத்தை அதிகரித்து நோய்க்கிருமிகளை ஈர்த்து வளரும் பயிரை தாக்கி மகசூலை குறைக்கின்றது.

சூடோமோனஸ் பாக்டீரியாவானது அனைத்து பயிர்களிலும் மண்ணின் மூலம் பரவும் நோய்களான வேரழுகல் நோய், வாடல் நோய், நாற்று அழுகல் நோய் போன்றவற்றை கட்டுப் படுத்துவதுடன் நெல்லில் குலை நோய், இலை உறை கருகல் நோய் மற்றும் பாக்டீரியா இலை கருகல் நோய் போன்ற நோய்களின் பாதிப்பையும் குறைக்கிறது.




சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் பயிரில் ஏற்படக்கூடிய நோய்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் கட்டுப்படுத்து கிறது. நோய் எதிர்ப்பு பொருள்களான பயோலூட்ரின் மற்றும் பைரால்நைட்ரின் போன்றவற்றை உற்பத்தி செய்து நேரடியாக நோயை கட்டுப்படுத்துகிறது. மறைமுக நோய் எதிர்ப்பு முறையில் நோய் உண்டாக்கும் காரணிகளை தாக்காமல் நோய் எதிர்ப்பு நொதிகளை தாவரத்தில் அதிக அளவில் சுரக்கச் செய்து அதன் மூலம் நோய்க் காரணிகளின் வளர்ச்சி வீதத்தை கட்டுப் படுத்துகிறது.

இந்த பாக்டீரியத்தின் சிறப்பம்சம் பயிர் வளர்ச்சி ஊக்கி ஹார்மோன்களான ஆக்சிஜன், ஜிப்ரலின் ஆகியவற்றை சுரந்து பயிரின் வளர்ச்சியை அதிகரிக்கிறது.

**பயன்படுத்தும் முறை**

கிலோவுக்கு பத்து கிராம் வீதம் சூடோமோனஸ் கலந்து அந்த தண்ணீரில் விதையை ஊற வைத்து பின் பயன்படுத்த வேண்டும். நாற்றங்கால் நிலையில் இருந்தால் நாற்றுகளை அரை மணி நேரம் வரை ஊற வைத்து பின் நட வேண்டும்.

நாற்று நட்டு 30 நாட்களுக்கு பின் எக்டேருக்கு 2.5 கிலோ சூடோமோனஸ் கலவையை 50 கிலோ நன்கு மக்கிய சாண எருவுடன் கலந்து இட வேண்டும். நடவு நட்ட 45 நாட்களுக்குப் பின் 0.5 சத சூடோமோனஸ் கரைசலை நோயின் தீவிரத்தை பொறுத்து 10 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்கலாம்.




**முக்கியமாக கவனிக்க வேண்டியது**

இரசாயன பூச்சி மருந்துகளுடன் கலந்து பயன்படுத்தக் கூடாது. பாதுகாப்பான ஒரு எதிர் உயிரியாக சிக்கனமாக முறையில் நோய்களை கட்டுப்படுத்தி பயரின் வளர்ச்சியை அதிகரித்து அதன் மூலமாக மகசூலையும் அதிகரிக்க செய்கிறது.

எனவே, விவசாயிகள் இயற்கை முறையில் தங்கள் பயிரை பாதுகாத்திட சூடோமோனாஸ் ஒரு மிகச்சிறந்த தேர்வாகும்.

மாவட்டத்தில் அனைத்து வேளாண் விரிவாக்க மையங்ளிலும் விவசாயிகளின் தேவைக்கு இருப்பு வைக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது என அவர் கூறினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik® Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# மழைக்காலங்களில் பண்ணைகளில் வெள்ள மேலாண்மையை கடைப்பிடிக்க சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் ஆலோசனை

திருச்சி, டிச.10

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த பயிற்சிகள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, வெள்ள எதிர்பார்ப்பின் போது மேற்கொள்ள வேண்டிய பண்ணை பாதுகாப்பு பணிகள் பற்றிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன:

1. மாட்டுத் தொழுவங்களின் கதவுகளை திறந்து வைக்கவேண்டும். இதனால் அதிக அளவில் நீர் வந்தால் கால்நடைகள் தப்பிக்க ஏதுவாகும்.

2. வெள்ளத்தின் போது அனைத்து கட்டிடங்களிலுள்ள மின்சாரத்தை துண்டிக்க வேண்டும்.

3. கட்டிடங்களின் கதவுகள் மற்றும் ஜன்னல்களை திறந்து வைக்க வேண்டும்.

4. மின்மோட்டார்கள் மற்றும் மின்னணு சாதனங்களை மேட்டுப்பாங்கான பகுதிகளுக்கு மாற்றம் செய்ய வேண்டும்.

5. பண்ணைக்கருவிகள், மாட்டு தீவனம், உணவு தானியங்கள், பூச்சி மருந்துகள் மற்றும் களைக்கொல்லி மருந்துகளை வெள்ளம் பாதிக்காத மேட்டுப்பாங்கான இடத்திற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. நீர் கடத்தும் பைப்புகள், எரிபொருள் டாங்குகள் மற்றும் தனித்தனியாக உள்ள கருவிகள் மற்றும் பொருள்களை இணைத்து கட்டி வைக்க வேண்டும்.

**வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சில முக்கிய குறிப்புகள்**

1. ஈரமான பகுதிகளில் மண் கடினத்தன்மையை தவிர்க்க கனரக வாகனங்கள் மற்றும் கனரக பண்ணைக்கருவிகள் செல்வதை தடுக்க வேண்டும்.

2. அனைத்து வடிகால் பகுதிகளையும் திறந்து வைக்க வேண்டும்.

3. நீர்ப்பிடிப்புள்ள மண் கண்டப்பகுதிகளில் மண் பரப்பினை மூடி பயிர்கள் வளருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. வெள்ளம் பாதித்த பகுதிகளில் பண்ணை கழிவு மற்றும் தொழு உரங்களை இட்டு உழவு செய்ய வேண்டும்.

5. வெள்ள பாதிப்பால் மண்ணின் சத்துக்கள் குறைய வாய்ப்புள்ளது. எனவே மண்மாதிரிகள் எடுத்து ஆய்வு செய்து மண்ணின் சத்துகளின் புதிய நிலை அறிந்து அதன்படி உரங்கள் இட வேண்டும்.

6. வெள்ளத்தால் ஏற்பட்ட வண்டல் பகுதிகளை நீக்கக் கூடாது. நன்கு காய்ந்தவுடன் இந்த வண்டல் பகுதிகளை பரப்பி உழவு செய்ய வேண்டும்.

7. ஆழ உழவு செய்வது தவிர்க்கப்பட வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு 0431 2962854, 91717 17832 என்ற எண்ணை அலுவலக நேரத்தில் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை) தொடர்பு கொள்ளலாம் என சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜா பாபு தெரிவித்தார்.




# பிரதமரின் வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதி

புது தில்லி, டிச.10

பிரதமரின் வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் கிரின்னதி ஆகிய திட்டங்களின் கீழ் சம்பந்தப்பட்ட மாநிலத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட வருடாந்திர செயல் திட்டங்களின் அடிப்படையில் மாநில அரசுகளுக்கு மானியமாக நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டங்களில் உள்கட்டமைப்பு அம்சங்கள், பயனாளிகள் சார்ந்த நலத்திட்டங்கள் ஆகியவை அடங்கும்.

இத்திட்டத்தின் வழிகாட்டுதல்களின்படி, மாநிலங்கள் யூனியன் பிரதேச அரசுகள் நேரடி பணப் பரிமாற்றத்தை (DBT)




ரொக்கமாகவோ அல்லது பொருளாகவோ மாற்றுகின்றன. மாநில அளவில் மட்டுமே தனிப்பட்ட பயனாளிகள் பற்றிய தகவல் தொகுப்பு பராமரிக்கப்படுகிறது. இரண்டு திட்டங்களும் மாநிலங்கள் யூனியன் பிரதேச அரசுகள் மூலம் செயல் படுத்தப்படுகின்றன.

உரிய நேரத்தில் வெளிப்படையான வழிகாட்டுதல்கள் மற்றும் ஆலோசனைகள் இந்த அமைச்சகத்தால் அவ்வப்போது வழங்கப்படுகின்றன.

இதனை மக்களவையில் இன்று கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை இணையமைச்சர் ராம் நாத் தாக்கூர் தெரிவித்தார்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.